# அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**Tamil Competition - Australian Society of Graduate Tamils**

## அகில அவுஸ்திரேலிய தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் – 2006
## விளக்கப் பட்டறை (WORKSHOP) அழைப்பிதழ்

அவுஸ்ரேலியாவில் வாழ்கின்ற தமிழ் சிறார்கள் தமிழ் கற்பதை தொடர்ந்து ஊக்குவிப்பது, அவர்களிடையே தமிழ்மொழி, தமிழ்க் கலாச்சாரம் ஆகியனவற்றில் ஆர்வம், பற்று, ஈடுபாடு ஏற்படுத்துவது மற்றும் இங்குள்ள தமிழ் இளைஞர்களிடையே நல்லதொரு தலைமைத்துவத்தை உருவாக்குவது போன்றவை எமது தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளின் நோக்கமாகும். வழமைபோலவே சிட்னியில் 20 போட்டிகள், மூன்றிலிருந்து 30 வயதுக்குட்டபட்டவர்களுக்கு, வெவ்வேறு வயதுப் பிரிவினராக நடாத்தப்படவிருக்கின்றன. இந்தப் போட்டிகளில் பாடல்மனனம், வாய்மொழித் தொடர்பாற்றல், எழுத்தறிவு, பேச்சு, விவாதம் என்பன இடம்பெறவிருக்கின்றன.

இப்போட்டிகள் சிறப்பாகவும் உயர் தரத்துடன் நடாத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் எடுத்து வருகின்றோம். இந்த வகையில், இந்த போட்டிகள் பற்றிய விளக்கங்களை அளிப்பதற்கு விளக்கப் பட்டறை **(WORKSHOP)** ஒன்றை ஒழுங்கு செய்துள்ளோம். இந்தப் பட்டறையில் இந்தப் போட்டி நடாத்தப்படும் முறை, போட்டியாளர்களிடம் நாம் எதிர்பார்க்கும் திறமைகள், போட்டியாளர்களை பயிற்சி அளிப்பதற்கான அறிவுறைகள், மதிப்பீட்டு முறைகள் பற்றிய விளக்கங்கள் வழங்கப்படும். அன்றைய தினம், உங்கள் போட்டி பற்றிய விபரங்கள் சரி பார்ப்பதற்கும், போட்டி பற்றிய மேலதிக விபரங்களைப் பெறவும் வசதிகள் செய்து கொடுக்கப்படும். அங்கு உங்கள் கேள்விகளுக்கும் பதிலும் அளிக்கப்படும். இந்தப் பட்டறை நடைபெறும் இடமும், ஆகஸ்ட் மாதம் போட்டிகள் நடைபெறவிருக்கும் இடமும் ஒரே இடமாதலால், அங்கு வருவதற்கான பாதையை முன்கூட்டியே அறிந்திருக்கவும், இது உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம்.

எனவே இந்தப் பட்டறைக்கு உங்களை அழைக்கின்றோம்.

### விளக்கப் பட்டறை (WORKSHOP)

நேரம்: 2.30PM, ஞாயிற்றுக் கிழமை 9/7/06

இடம்: Auburn North Public school, Adderley St, Auburn

பட்டறை பற்றிய மேலதிக விபரங்கள் பெற்றுக் கொள்ளவிரும்பின், எம்முடனே தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு:** PO Box 4040 Homebush NSW 2140. Tele: 0433 088 725 or 02-9758 7970.
E-mail tamilcomp@yahoo.com Web: www.unifundproject.org